**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE**
**CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No. 464/2025**
**Sessions :**
**Deposition of Witness for :PW1 , LW1**

| | |
|---|---|
| Name | திரு.ஜெயகுரு |
| Father's/Husband Name | : திரு.செல்வராஜ் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 29th day of June, 2026**

எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்.

முதல் விசாரணை:-

1. நான் தற்போது சூணாம்பேடு காவல் நிலையத்தில் காவலராக பணி செய்து வருகிறேன்.

2. கடந்த 19.10.2025 அன்று காலை சுமார் 11.00 மணிக்கு நானும், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.குப்புசாமி, காவலர் 720 பிரபு ஆகியோருடன் நானும், சூணாம்பேடு புறகாவல் நிலையம் அருகே வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தபோது கோணி பையுடன் ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவர் எங்களை பார்த்தவுடன் ஓட முயன்றார் அவரை மடக்கி பிடித்து அவரை விசாரணை செய்தபோது மேற்படி நீதிமன்ற ஆஜர் எதிரியிடம் கோணி பையில் பாண்டிச்சேரி அரசு மதுபானங்கள் சம்பந்தப்பட்ட சுமார் 15 பாட்டில்கள் இருந்தன. அவற்றை எங்கள் இருவர் முன்னிலையிலும் கைப்பற்றி

கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். மேற்படி கைப்பற்றுதல் மகசரில் நானும், பிரபு என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(மேற்படி கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி ஆஜர் எதிரியை நிலையம் கொண்டு வந்து அவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை,</u>**

3. வாகன சோதனையில் எந்த தேதி, தினம் எந்த அதிகாரியுடன் ஈடுபட்டேன் என்றால் தீபாவளிக்கு முந்தைய நாளில் இருசக்கர வாகனத்தில் ரோந்து பணியில் ஈடுபட்டோம். காவல் நிலையத்திற்கும், ரோந்து பணிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும். சம்பவ இடத்தில் பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லை என்றால் 4 பேர் இருந்தார்கள். மேற்படி சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் பொதுஜன சாட்சிகளை சாட்சியாக விசாரித்திருப்பேன் என்றால் சரியல்ல.

4. எஸ்.ஓ.சி தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. உயர்அதிகாரிக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பாட்டில்களை பார்த்தேனா என்றால் பார்த்தேன், பிறகு சிறப்பு உதவி ஆய்வாளர் குப்புசாமியிடம் கொடுத்துவிட்டேன். புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கிற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**(இத்துடன் குறுக்கு விசாரணை முடித்து கொள்ளப்படுகிறது)**
**மறு விசாரணை...இல்லை**

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi**
District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.